செ.வெ.எண் : 34 / ஜூன் நாள் : 16.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## தொழில் முனைவோர்களுக்கு மானியத்துடன் தொழில் துவங்க சிறப்பு ஆலோசனை முகாம் வருகின்ற 20.06.2017 மற்றும் 22.06.2017 ஆகிய 2 நாட்கள் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாவட்ட தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP), வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) மற்றும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத்திட்டம். (NEEDS) ஆகிய திட்டங்கள் குறித்து வங்கியில் கடன் பெற்றிட ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு ஆலோசனை வழங்கிட ஏதுவாக சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான சிறப்புமுகாம் எதிர்வரும் 20.06.2017அன்று காலை10.00 மணிக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பரமக்குடியிலும், 22.06.2017அன்று காலை 10.00 மணிக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முதுகுளத்தூரிலும் நடைபெற உள்ளது. மேலும், இம்முகாமில் ஏற்கனவே மேற்குறிப்பிட்ட திட்டங்கள் குறித்து விண்ணப்பம் பெற்றவர்கள் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய சிரமங்கள் ஏதும் இருப்பின் அன்றைய தினம் ஆலோசனை வழங்கப்படும். எனவே சுய தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் தங்களுடைய கல்வி சான்றிதழ்கள், ஆதார்அட்டை குடும்ப அட்டை, விலைப்புள்ளி, திட்ட அறிக்கை, சாதிசான்றிதழ் ஆகியவற்றின் இரு நகல்களுடன் மேற்கூறிய தினங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வருகைதந்து விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**